# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.141/2025

Deposition of Witness for L.W.4 / P.W.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மூர்த்தி | | | |
| Father's Name | : | நல்லத்தம்பி | Occupation | : | மளிகை கடை |
| Village | : | சூரம்பட்டிவலசு | | | |
| District | : | ஈரோடு | Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.06.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் சூரம்பட்டிவலசு M.S.K. நகரில் குடியிருந்து வருகிறேன். மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். சண்முகப்பிரியா என்பவரை எனக்கு தெரியும். அவர் எனது வீட்டிற்கு மேல் வீட்டில் குடியிருந்து வருகிறார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் விசாரித்த போது இவ்வாறு தான் சொன்னேன்

**<u>(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்).</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

கடத்த 11.03.2024 ஆம் தேதி, இரவு 11.45 மணிக்கு சண்முகப்பிரியா எனது வீட்டு முன்பு நடந்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த ஆஜர் எதிரிகள் அவரை தகாத வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அதை நான் நேரில் பார்த்ததாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால், இல்லை. நான்

எனது கடையை இரவு 09.00 மணிக்கு சாத்தி விடுவேன். நான் சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**<u>மறுவிசாரணை: இல்லை.</u>**

| |
|---|
| Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.<br><br>J.M. A.M.C. |

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.141/2025

Deposition of Witness for L.W.5 / P.W.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தாமேதரன் | | | |
| Father's Name | : | இளங்கோ | Occupation | : | கல்லூரி மாணவன் |
| Village | : | சூரம்பட்டிவலசு | | | |
| District | : | ஈரோடு | Age | : | 20 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.06.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது சூரம்பட்டிவலசு, பாரதிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கல்லூரியில் படித்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு ஈரோடு தெற்கு போலீசார் சண்முகப்பிரியாவின் வீட்டு அருகில் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நானும், கீர்த்தி வாசன் என்பவரும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம். என்னுடையது தான். முதலாவது கையொப்பம் கீர்த்திவாசன் என்பவரது ஆகும். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கு விபரங்களை நான் போலீசார் சொல்லி தான் தெரிந்து கொண்டேன் என்றால், சரிதான். இந்த வழக்கு சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது போலீசார் எழுதியிருந்த காகிதத்தில் கையொப்பம் செய்யச்

சொன்னார்கள், நான் செய்தேன் என்றால், சரிதான். அந்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால், சரிதான், வரைபடம் வரைந்து இருந்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டு இந்த வழக்கிற்காக சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.